உ

கடவுள் துணை.

திருவருணைமாநகரம்.

# ஸ்ரீ துற்கையம்மன் பதிகத்துதி.

இஃது


திருவண்ணாமலையிலிருக்கும் ஆரணி
ஜாகீர் பையூர் பிர்மஸ்ரீ
உ, வே, திராவிடரத்னாகரம் ஜெ. அரங்க
சாமி பாரதியார் அவர்களின் மாணவர்
திரு, வா, அண்ணாமலைபிள்ளையவர்கள்
வேண்டுகோளுக்கிணங்கி

திருவண்ணாமலை தாலூக்கா வள்ளிவாகை
கிராமத்திலிருக்கும்
ஞானதீபரத்னம் நா, ஆறுமுகம்பிள்ளை
அவர்களால் இயற்றியதை

திருவண்ணாமலை மகா-ா-ா-ஸ்ரீ
அ. சு பொன்னுசாமிசெட்டியார்
அவர்களின் பொருளுதவியால்
...க்கப்பெற்றது. ...பக்

...திருவண்ணாபுனக்கெனது
...—27உ தேதா
...கட்கசுனைபானின்ற
...ரியகமிவ

Q25:38'211TR
N29
128309



உ

கடவுள் துணை,

திருவருணமாநகரம்.

# ஸ்ரீதுர்க்கையம்மன்பதிகத்துதி

## காப்பு

சீர்கொண்டவருணைவளர் தேற்றமுருதுர்க்கையம்மன்
ண்டவிப்பதிகம் பேசுதற்கு கார்கொண்ட
மருகர் மெல்லடிகளீரிரண்டுந்
டித்தான்.

ஸ்ரீ அபீதகுஜாம்பாள் துணை.

உலகெலாந்துதியருணை நகரிலுறையபிராமி
முளதுர்க்கையம்மையுமையே
ஒளிர்மூலகுண்டலிக்கு டிலைசிவசத்தியே
ஓதரியவேகாட்சரி
அலகுதிரிசூலியே யமிர்தபஞ்சாக்ஷரி
யாராறுமாறொன்றுமா
யமர்கோணவல்லியே திரிகோணரீங்காரி.
ஆரக்கரத்துசோதி
இலகுமிரு நாலெழுத்துடையநாராயணி
எவ்வுலகுமீன்றவன்னாய்
எப்பொருட்குமிறைவிதப்பிலாவரமளித்
தென்குறைதவிர்த்தாளுவாய்
துலவ வடியாலதிக கலகமிடுமாயைத்
தொலைத்தவுண ஞனதீயத்
துட்டமகிடனை வென்ற கட்கசூலைபாணின்ற
துர்க்காம்பி காயநமவே 1

அன்னபூரணிபாப நாசரொடுசட்கசூலை
அருகில்வாழ் கௌரியேயுன்
அருளினாலல்லவோ இரவிமதிசெல்வதும்
அண்டர்குழுநொண்ட வாழ்வும்
தென்னவன் வாகலத்தூர்ந்தும்பரமனுறு
சிகரியுறமூற்றொளிர்வதும்
தேவர்கோன்மனைவிக்கிமங்கிலியவலிமையுந்
தீக்கடவுள் பயமற்றதும்
இன்னரர்பிரானுக்கு செல்வ நிலை கொண்டதும்
கேசவன் பதிவனப்பும்
இரீசநிடபாகமதை பிரியாதவண்ணமாய்க்
கிரிசைக்களித்த புகழும்
துன்னலிடகொண்ட பேரன்னுபுனக்கெனது
துக்கமதை போக்கலரிதோ
[illegible]மகிடனைவென்ற கட்கசூலைபாணின்ற
துர்க்காம்பி காயநமவே 2

அரவணையைகவணெனக்காமதிலெடுத்துவிளை
    யாடுபெரு வலிமகிடனை
அடல்கொண்ட்வன்று யடிக்கடிமைகொளுமெந்த
    னடையலரை மாற்றலரிதோ
தரணிதனிலவருரில் சிரமைகளை தருவரென
    தாயுனக் கறியாததோ
தஞ்சமெனவந்தவெனை யஞ்சலென்றபயகைத்
    தந்துகாத்திடல் பாரமோ
சரணமதில் வந்தவரை தளரவிடலழகல்ல
    தகுதியோர்க் குறியதல்ல
தப்பாமலாட்கொண்டு யெப்போதுமே யெனை
    தர்க்கார்த்தி ரட்சியம்மா
துரகமுதலளவில்படை தளையதிலுருண்டபின்
    துணைவர். புடைசூழவந்தத்
துட்டமகிடனைவென்ற கட்கசுனைபாணின்ற
    துர்காம்பி காயநமவே 3

அண்ணாமலைப்பாக முண்ணாமுலைபெற
    வருந்தவ முடித்தவளுநீ
அரனுறையும் சித்தகிரி சிதராது படிமிசை
    யமைத்துப்புகழ் கொண்டவளுநீ
விண்ணாடுகுடியேற நண்ணார்களைக்கொன்று
    விட்டபெருவலியுடையநீ
வேதாவுமவனையருள் தாதாவுமவரவர்
    விதியைநிலை செய்தவிறல்நீ
பண்ணாரும்வெண்கமலை செங்கமலைமுதலோர்
    பதங்களைத்தந்ததிறல்நீ
பரிதிமதிரதமதில் செலவிடுத்துலகமதை
    பாதுகாத்திடுபவளுநீ
தொண்டாகவுன்மகிமை கண்டேயடைந்தவெனை
    சோரவிடலாகாதுநீ
துட்டமகிடனைவென்ற கட்கசுனை பாணின்ற
    துர்க்காம்பிகாயநமவே 4

ஓதுமறைமுடியினிலாடுபத மடியவர்க்
குற்றதுயரோட்டுப்பதம்
உலகெலாம்விலைபெறும் நிலமெலாமொளியுறு
முயர்தண்டை பூண்டப்பதம்
போதுக்கொரு மூன்றுமாதித்தாலணி
பூற்றழும்பெரியபதம்
போற்றுபிரமாதியர்கள் முடிபடச்செங்கமல
பூவெனசிவந்தப்பதம்
சாதுசெனமுடன் வாதுசெய்துட்டர்க்கிடியெனத்
தலைதனிற்றுக்கும்பதம்
சந்ததமுமெந்தனிட சிந்தைகுடியாய்பொதுவில்
தனியாய் நடிக்கும்பதம்
சூதுடையமாயைகெட சூரனமுடிமிசைவைத்த
தூயமலர்ப்பாத மருள்வாய்
துட்டமகிடனைவென்ற கட்கசூலைபாணின்ற
துர்க்காம்பிகாய நமவே ௫

குருதிசொரிதிரிசூல கரமுடையகௌரியே
கூறுமென்றொல்லையைக்கேள்
குவலயத்தெந்தனுக் கொருநலமுமெய்தாமல்
கொடியபகை பிணியுமிடியும்
வருத்துதே யென்செய்வேன நாயேன் முன்தவை
வாராதிருப்ப தென்னே [செய்து
வந்தியோநீபெற்ற வுலகமிதுவல்லவோ
மற்றுமொரு தாயெனக்கோ
திருதிவருள்ளதோ வுள்ளமறியாததோ
சிறியனெனை பாதுகாத்து
தீயபகைவறுமைபிணி போக்குவாயம்மணி
திருவடிக்கபயமம்மா
சுருதியுடை சங்கெடுத்தாதிவல்லசுரர்படை
சோர்ந்தபின் வந்தெதிர்த்த
துட்டமகிடனைவென்ற கட்கசூலைபாணின்ற
துர்க்காம்பிகாய நமவே ௬

புண்டசமவுணர்குடல் கொண்டுமேபந்தலிட
போர்செயுங்கூர் வாளுள்ளாய்
புவியிலெனைவஞ்சகர் செய்கொடுமைகள் சொலப்
போமோ சகிக்கவாமோ
கண்டிருந்தும் மிதனைசும்மாவிருப்பதுன்
கருணைக்கிபழகாகுமோ
காவல்செயபாதிடுங்கைம்மாருவேண்டுமோ
கௌரியென்னலாகுமோ
அண்டினவர்துன்புறக் கண்டிடுவதழகல்ல
அசலவிட நீதியல்ல
அன்னையேயுன்னையே நம்பினேனென்னையே
ஆதரித்தாளுமம்மா
துண்டமுருகளிறுகளை கண்டித்தபெருவலித்
தோளுடைய சூலபாணி
துட்டமகிடனைவென்ற கட்கசுனைபாணின்ற
துர்க்காம்பிகாய நமவே 7

கங்கைகோதாவரி சிந்துபிரம்மாநதி
கன்னநதி பெண்ணையுடனே
சம்பைசேயார்வைகை கும்பநதியாதியாய்க்
காசினியிலோடியாடி
தங்கதானியமாடை சங்கர்ப்பமோடுதந்து
தவவேள்வி செய்துளோருந்
தரணிதனிலருணைகிரி சிந்தித்து மனமொத்தன்
சன்னதியை சுத்திவங்க
சிங்கவாகனமேரு மன்னையுனைக்கண்டு
சேவித்த வடியார்பெறும்
சீரோங்குபதவியைப் பெருவரோ வப்புகழை
செப்பவுமெளிதாகுமோ
துங்கமிகு சுடர்மௌலி சங்கரியெண்டோளி
சோதிசிவ சத்திநீயே
துட்டமகிடனைவென்ற கட்கசுனைபாணின்ற
துர்க்காம்பிகாயநமவே 8

சத்த சித்தானந்த வடிவாய் விளங்குசிற்
சத்தியாங் கௌரியேயுன்
சன்னதிக்கெதிர் பொன்னுசாமி சீமான் செய்த
தனிநெடுஞ் சிகரிதீபம்
சுத்தவொளிசெய்யவே பக்தரெத்திசையிலுஞ்
சூழ்ந்து துதியலைபோற்சொல
சுடர்முடி துலங்க பொற்பலபணியிலங்கவாள்
சுனைபுனலின் வளிவீசவே
முத்தலங்கார சிங்காசனக் கொலுவில் கரி
முகவனறு முகவனுடனே
முன்னையாமன்னபூரணிபாப நாசமொடு
முதல்வி நீ வீற்றிருப்பாய்
துத்திபடர் பூண்முலை பன்னையுன் சேவையெழில்
சொல்லவு மெளிதாகுமோ
துட்டமகிடனைவென்ற சட்கசூலபாணின்ற
துர்க்காம்பிகாய நமவே 9

அன்னையேமனுவொன்று என்னவெனில் நீவாழு
மருணைநகர் தன்னிலுள்ள
அண்ணாமலைச் செட்டி சுதனுக்கு சுதனாக
வவதரித்திட்ட வள்ளல்
பொன்னுசாமித் தாதாஎன்னவே பேர்பூண்ட
புகழுடம் புள்ள சீமான்
பொலிவுடைய சிகரிசெய்தனுதினந்தளிபணி
புரிபுண்ய நவியடைந்தால்
என்னவென்று லகுனைச்சொல்லிவிடுமம்மம்ம
இது வுனதுமகிமை யழகா
எப்பொருட்கும் மிறைவி தப்பிலாதொண்டனுறு
மிடர்தீர்த்தி ரட்சியம்மா
சொன்னபணிபூண்டெளிறு மின்னலிடையாய்வி [னவு
தூயவரந் தந்தருளுவாய்
துட்டமகிடனைவென்ற கட்கசூலபாணின்ற 10
துர்க்காம்பிகாய நமவே

வீறுடைய விந்தையுன் சன்னதி யென்னுளிலும்
　　மேதினியிலோங்கி வாழ்க
வில்லம்பு கட்கதிரிசூலம் வேல்சங்கமும்
　　மேன்மேலும் வெற்றியடைய
சேறுனக்கிடு பொன்னுசாமி சீமானுக்கு
　　திருத்தலைவனாநின்
சிகரியெனவளரத்திருப்பணிகள் செயுமடியர்
　　செகமதனில் குடியேறிட
ஆறுமுகனெனுமுனது வடிவமெனன்பகைபிணி
　　யகற்றியிப்புவியின் மேலாம்
ஆக்கமுஞ் சந்ததியு முடைய குடிவாழ்வதனை
　　யடையகடைக்கண்ணருள் செய்வாய்
தூறுடையபகைவருடல் கூறுசெயுமதிக வலி
　　துர்க்கை நீயென்று வாழ்க
ஆட [illegible] வென்ற கட்கசூலபாணின்ற
　　[illegible] தாய நமவே 11
　　　　மங்களம்.

